CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්වය නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்
No 6/5, Layards Road, Colombo 05, **Tel:** +094-11 3010664
**Fax**: +094-11 2505228 **E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org

**உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் 2018**

ஊடக அறிக்கை – 02

2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி, மு.ப 09.00, கொழும்பு, இலங்கை

புதிய தேர்தல் முறையின் கீழ் மற்றும் பல விசேட அம்சங்களின் சேர்க்கையுடன் நடத்தப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்டுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களானவை இந்நாட்டின் தேர்தல்கள் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமையக்கூடியது. குறிப்பாக பெண்களின் அரசியல் பிரதநிதித்துவத்தை வலுப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு சட்டரீதியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பெண்களுக்கான 25 % ஒதுக்கீடு சிறப்பு அம்சமொன்றாக கருதப்படுகின்றது.

புதிய தேர்தல் முறையின் கீழ் பெண்களுடைய பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்த வேண்டிய தலையாய பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழு இப்பொறுப்பினை ஆற்றுவதற்கு அனைத்து அரசியற் கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் இயன்றளவான ஆதரவினை வழங்குதல் வேண்டும்.

இது இவ்வாறிருக்க, பெரும்பாலான அரசியற் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள் என ஒவ்வொரு பிரிவினரும் பெண்களுடைய அரசியல் பிரதிநிதித்துவம் பற்றி தவறான எண்ணப்பாடுகளைக் கொண்டுள்ளனர். அவர்களுடைய பிரதான கருத்தாக அமைவது வரலாற்றில் முதன்முறையாக பெண்களுடைய அரசியல் பிரதிநிதித்துவத்தினை ஒதுக்கீட்டின் மூலமாக உறுதிப்படுத்திய போதிலும்கூட அது அர்த்தமுள்ள பிரதிநிதித்துவமொன்றாக அமையாது என்பதே ஆகும்.

வட்டாரத்திற்காக போட்டியிட்டு நேரடியாகத் தெரிவு செய்யப்படும் வேட்பாளர்களைத் தவிர ஏனைய வேட்பாளர்களை நியமிக்கின்ற அதிகாரம் திருத்தச் சட்டமொன்றின் மூலமாக அவ்வவ் கட்சிகளுடைய செயலாளரிடமும், சுயேட்சை குழுக்களுடைய தலைவரிடமும் காணப்படுகின்றமையானது மேற்கூறப்பட்ட கருத்தினை வலுப்படுத்துவதாக அமைகின்றது என்று பெண் செயற்பாட்டாளர்களும் மற்றும் பெண்கள் அமைப்புக்களும் தெரிவிக்கின்றன. மேலும் இவ் அதிகாரமானது மறைமுகமாக அவ்வவ் கட்சியின் ஒழுங்கமைப்பாளர்களினாலேயே பிரயோகிக்கப்படும் என்பது இவ்விடயத்தின் பாதகத்தன்மையினை அதிகரிக்கின்றது. இவ் விமர்சனங்களை இலகுவில் தகர்த்தெறிதல் முடியாது.

எவ்வாறெனினும் இம்முறை புதிய உள்ளூர் அதிகார சபைகளுக்காக குறைந்தளவில் 1985 பெண் உறுப்பினர்கள் நியமிக்கப்படவிருக்கின்றார்கள். இதேவேளை நியமிக்கப்படவிருக்கின்ற இப்பெண் உறுப்பினர்களை இந்நாட்டில் பெண்களுடைய அரசியல் பங்குபற்றுகைக்கான ஒரு மைல் கல்லாக கருதவியலும்.

இம்முறைத் தேர்தலிலே பெண்களுடைய செயற்பாடுகள் குறித்து தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது உன்னிப்பான கண்காணிப்புக்களை மேற்கொண்டு

வருகின்றது. பெண்களுடைய அரசியல் பங்குபற்றுகைக்கு எதிராக இடம்பெற்றுள்ள பல சம்பவங்கள் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு கிடைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு கிடைக்கப்பட்டுள்ள தகவல்கள் அல்லது சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு, பெண்களுடைய அரசியற் செயற்பாடுகள் தொடர்பில் நன்கு ஆராய்ந்து பார்க்கின்ற போது, இலங்கை அரசியலில் பெண்களுடைய பங்குபற்றுகையினை உறுதிப்படுத்தும் பொருட்டு வழங்கப்பட்ட 25 % ஒதுக்கீடு என்ற விசேடமான வாய்ப்பினை கட்சியின் செயலாளர்களும், சுயேட்சை குழுக்களும் சரியான முறையில் பயன்படுத்தவில்லை என்பது தெளிவாகின்றது.

குறிப்பிட்ட சில அரசியல் கட்சிகள் அரசியலில் குறிப்பிட்ட விகிதத்தில் பெண்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதும் பெரும்பாலான தலையீடுகள் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை முடக்கும் நோக்குடனேயே மேற்கொள்ளப்படுகின்றன.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு கிடைக்கப்பட்ட பெண் வேட்பாளர்கள் மற்றும் அவர்களுடைய ஆதரவாளர்களுக்கு எதிராக இதுவரை இடம்பெற்றுள்ள வன்முறைச் சம்பவங்களின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

**பெயர் நியமனப்பட்டியலிலே பெண்களுடைய பெயர்களை உட்சேர்த்தல்**

தேர்தல் காலங்களிலே பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற வன்முறைகள் குறித்து விவாதிக்கப்பட்ட தருணங்கள் மிகவும் சொற்பமாகும். உள்ளூர் அதிகார சபைகளுக்காக பெயர் நியமனங்களைச் செய்வதற்கான அறிவிப்பு விடுக்கப்பட்ட தினத்திலிருந்து பெயர் நியமனங்களைச் செய்து முடிக்கின்ற வரையிலான காலப்பகுதியில் பெயர் நியமனம் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பான பல்வேறுபட்ட சம்பவங்கள் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தில் பதிவாகியுள்ளன.

1. பல்வேறு அரசியற் கட்சிகளின் பிரதான கட்சி ஒழுங்கமைப்பாளர்கள் பெண்களுக்கு வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான வாய்ப்பினைத் தருவதாகக்கூறிவிட்டு வேட்பு மனுவில் கையொப்பம் இடும் தினம் வரையில் குறிப்பிட்ட பெண் வேட்பாளரின் பெயரை பெயர் நியமனப் பத்திரத்தில் உள்ளடக்கியுள்ளமை பற்றி குறிப்பிட்ட பெண் வேட்பாளருக்கு அறிவிக்காது அவருக்கு காணப்பட்ட போட்டியிடுவதற்கான வாய்ப்பினை இழக்கச் செய்தல்.

2. உள்ளூர் அதிகார சபை தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான வாய்ப்பினைத் தருவதற்காக பாலியல் இலஞ்சம் கோருதல்.

3. புதிய தேர்தல் முறை தொடர்பில் பல பெண் வேட்பாளர்களுக்கு பூரண விளக்கம் இல்லாததனை பயன்படுத்தி, பெயர் நியமனப் பட்டியலிலே பெயர் உள்ளடக்கப்பட்டிராவிடினும் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் குறிப்பிட்ட பெண் வேட்பாளர்களை உறுப்பினர்களாக நியமிக்கும் அதிகாரம் கட்சி செயலாளருக்கு உண்டு என கூறி பெண் வேட்பாளர்களை ஏமாற்றுதல்.

4. வேட்பு மனு தாக்கல் செய்துள்ள பெண் வேட்பாளர்களை அவர்களுடைய பிரச்சார நடவடிக்கைகளை அவரவருடைய கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுடன்

இணைந்து அவரவர் விருப்பப்படி திட்டமிட்டு சயாதீனமாகச் செயற்படுவதற்கு இடமளிக்காது கட்சியின் பிரதான ஒழுங்கமைப்பாளர்கள் தடை விதித்தல்.

5. வேட்பு மனு தாக்கல் செய்துள்ள பெண் வேட்பாளர்களுடைய பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளவிடாது செயற்படுவதுடன் அவர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் பொய்யான முறைப்பாடுகளை செய்தல் மற்றும் 'பெண்களுக்கு வாக்களிக்க வேண்டாம்' என்று பொதுமக்களுக்கு உபதேசம் வழங்குதல்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பான அடிப்படை அறிக்கைகளை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தன் வசம் கொண்டுள்ளது என்பதுடன் அத்தகைய சம்பவங்களில் சில கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

**2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி, புத்தளம் மாவட்டம்: வெறுப்பூட்டுகின்ற வார்த்தைப் பிரயோகங்களினால் பெண் வேட்பாளர்களுக்கு அசௌகரியத்தினையும் அபகீர்த்தியினையும் ஏற்படுத்துவதன் மூலமாக தேர்தல் செயன்முறைக்கு இடையூறு விளைவித்தல்**

புதிய தேர்தல் முறையினை கண்டனம் செய்கின்ற வகையிலான மற்றும் வேட்பாளர்களை சஞ்சலப்படுத்துகின்றதான வெறுக்கத்தக்க பேச்சுக்களை உள்ளடக்கிய காணொளிப்பதிவுகள் சமூக ஊடகங்களில் வலம் வருவதனை நாம் காணக்கூடியதாக உள்ளது.

இணையத்தில் பதிவிடப்பட்டுள்ள காணொளிகளிலே மௌலவி நியாஸ் அவர்களின் உரையைத் தாங்கியுள்ள காணொளியானது கடுமையான ஒன்றாக இனங்காணப்படுகின்றது. இவர் மிகவும் கடுமையான வார்த்கைளினைப் பிரயோகித்து பெண்களுடைய அரசியல் பிரதிநிதித்துவத்தினை மிகவும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

மேலும் குறிப்பிட்ட மதகுரு உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்காகப் போட்டியிடுகின்ற பெண் வேட்பாளர்களினுடைய கௌரவத்தினை அழிக்கும் வகையில் உரையாற்றியுள்ளார். இம்மதகுருவினுடைய பிரதான எண்ணம் பெண்களைத் தேர்தலில் போட்டியிடச் செய்யவிடாது தடுக்க வேண்டும் என்பதே ஆகும். குறிப்பாக இவர் மதகுரு என்ற ரீதியிலே இஸ்லாமிய மதத்தை பின்பற்றுபவர்களிடம் வடக்கு, கிழக்குப் பிரதேசம் மற்றும் புத்தளம் மாவட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் போட்டியிடுகின்ற பெண்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என கூறியுள்ளார்.

இத்தகைய செயற்பாட்டின் அபாயகரமான விளைவாக, குறிப்பிட்ட பிரதேசங்களிலுள்ள வாக்காளர்கள் இத்தகைய கூற்றுக்களின் செல்வாக்கிற்கு உட்பட்டு பெண் வேட்பாளர்களை நிராகரிக்கும் ஒரு நிலை ஏற்படலாம். ஆகவே இது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் இணை அழைப்பாளரான கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து தேர்தல்கள் ஆணைக்குழுவிடமும், பொலிஸ்மா அதிபரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் இக்கடிதத்திலே மேற்குறிப்பிட்ட மதகுரு இஸ்லாம் பிரிவொன்றான தௌஹீட் ஜமாத் என்ற பிரிவின் தலைவரென்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆத்துடன் இம்மதகுருவின் இத்தகையச் செயற்பாடுகளை உடனடியாக கட்டுப்படுத்தாவிடின், வேட்பாளர்கள் அனைவருக்கும் சமமான களத்தினை உருவாக்க வேண்டும் என்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் நோக்கமும் முயற்சியும் முறியடிக்கப்படும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் காணொளிப்பதிவுகளை குறிப்பிட்ட பிரதேசங்களில் போட்டியிடுகின்ற வேறுபட்ட அரசியற் கட்சிகளின் வேட்பாளர்கள் தங்களுடைய அரசியல் நடவடிக்கைகளுக்காக

பயன்படுத்திக்கொள்கின்றார்கள் என எங்களுடைய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பின் மூலம் அறிய முடிந்தது.

**2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி, புத்தளம் மாவட்டம்: நுரைச்சோலை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் பொய்யான முறைப்பாடொன்றின் அடிப்படையில் பெண் வேட்பாளர் ஒருவரை அவமானப்பத்துகின்ற வகையில் செயற்படுகின்றமை**

முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுகின்ற பெண் வேட்பாளர் ஒருவரான சி.ஏ. ரினுஷா இல்மா என்பவருடைய வீட்டிலே பலவந்தமான முறையில் நடத்தப்பட்ட அதிரடிச் சோதனையும் இத்தகைய சம்பவங்களுள் ஒன்றாகும். இச் சோதனையானது நான்கு (4) பொலிஸ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் பங்குபற்றுகையின்றி தனது வீட்டில் மேற்கொள்ளப்பட்ட இத்திடீர்ச் சோதனையானது தனக்கு அசௌகரியத்தினை ஏற்படுத்தியிருந்தது என்ற அடிப்படையில் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு முறைப்பாடு கிடைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அவசரத் தொலைபேசி இலக்கமான 119 இற்கு கிடைக்கப்பட்ட ஒரு அழைப்பின் அடிப்படையிலேயே இச்சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என நுரைச்சோலை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். குறிப்பிட்ட வேட்பாளர் தன்னுடைய வீட்டிலே சட்டரீதியற்ற முறையில் பணம் அச்சடிக்கப்படுவதாகவும், இதற்காக பெருமளவான கணிணிகள் பாவிக்கப்படுவதாகவும் அவ் அழைப்பினூடாக கூறப்பட்டுள்ளது. இது ஒரு திடீர்ச் சோதனையாக இருந்த போதிலும்கூட இதில் ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தர் பங்குபற்றியிருக்க வேண்டும் என குறிப்பிட்ட பெண் வேட்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் சோதனையினை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்திற்கிடமான எவ்விதமான பொருட்களையும் வேட்பாளருடைய வீட்டில் இருந்து கைப்பற்றியிருக்கவில்லை. இச்சோதனையினைத் தொடர்ந்து குறிப்பிட்ட பெண் வேட்பாளர் மற்றுமொரு சிரேஷ்ட வேட்பாளரான பிசிலியா ஊட்டோ என்பவருடன் இணைந்து பொலிஸ் நிலையத்திற்கு சென்றுள்ளார். இவர் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் பங்குபற்றுகையின்றி தனது வீட்டில் மேற்கொள்ளப்பட்ட இத்திடீர்ச் சோதனையானது தனக்கு அசௌகரியத்தினை ஏற்படுத்தியிருந்தது என்ற அடிப்படையிலேயே முறைப்பாடொன்றைச் செய்வதற்கு உத்சேித்திருந்தார்.

எனினும் அப்போது கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இம்முறைப்பாட்டினை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளனர். முறைப்பாட்டினை பதிவுசெய்கின்ற உத்தியோகத்தர் விடுமுறையில் சென்றுள்ளார் என்ற காரணத்தின் அடிப்படையிலேயே இவர்கள் முறைப்பாட்டினை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளனர். எவ்வாறெனினும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரான பேராசிரியர் எஸ்.ரத்னஜீவன் எச். ஊல் என்பவருக்கு அறிவித்ததன் பின்னர் CIB I 16/125 என்ற இலக்கத்தின் கீழ் இம்முறைப்பாடு பொலிஸாரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் குறிப்பிட்ட பெண் வேட்பாளருடைய முறைப்பாட்டினை பதிவு செய்யும் போது வேட்பாளர் கூறிய சில விடயங்களை முறைப்பாட்டில் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை என பொலிஸ் உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

**2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி, மொனராகலை மாவட்டம், வெல்லவாய பிரதேச சபை: அரசியற் கட்சி ஒன்றின் ஆதரவாளர்களுக்கும் சுயேட்சைக் குழு வேட்பாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பெண் வேட்பாளர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி**

ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டத்திற்கு உட்பட்ட வெல்லவாய தேர்தல் தொகுதியில் வெல்லவாய பிரதேச சபைக்காக போட்டியிடுகின்ற சுயேட்சை குழு வேட்பாளர் மற்றும் அரசியற் கட்சி ஒன்றின் ஆதரவாளர்களுக்கிடையில் மோதல் சம்பவமொன்று

இடம்பெற்றுள்ளது. இம் மோதல் சம்பவத்தின் விளைவாக சுயேட்சை குழுவின் சார்பில் போட்டியிடும் பெண் வேட்பாளர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் சிரிபுரகம, வெஹெரயாய எனும் இடத்தில் வசிப்பவராவார். இவர் சில காலங்களுக்கு முன்பு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரபல ஆதரவாளராக செயற்பட்டவராவார். இவர் இம்முறை உள்ளூராட்சி தேர்தலில் இலங்கை பொதுஜன முன்னனியின் சார்பில் வேட்பாளரொருவராகப் போட்டியிடுவதற்கு உத்தேசித்திருந்த போதிலும் அக்கட்சியின் கீழ் அவருடைய பெயர் நியமனம் செய்யப்படாததன் காரணமாக அவர் சுயேட்சை வேட்பாளராக வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார்.

இதன் காரணமாக இலங்கை பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்களுக்கும் குறிப்பிட்ட சுயேட்சை வேட்பாளருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் இலங்கை பொதுஜன முன்னனியின் ஆதரவாளர்களுக்கும் சுயேட்சை வேட்பாளருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமொன்று மோதலாக உருவெடுத்துள்ளது. இம்மோதலின் உச்ச விளைவாக குறிப்பிட்ட பெண் வேட்பாளரும், இலங்கை பொதுஜன முன்னணியின் பெண் ஆதரவாளர் ஒருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறிப்பிட்ட பெண் வேட்பாளர் தொடர்பாக 119 என்ற பொலிஸ் அவசர இலக்கத்திற்கு முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றுள்ளது. குறிப்பிட்ட பெண் வேட்பாளரான கே. ஏ. ரேணுகா தமயந்தி என்பவரின் வீட்டுக்கு அயலில் வசிக்கும் பொதுஜன முன்னணியின் ஆதரவாளரான திரு.ஆர்.எம்.லலித் ரத்நாயக்க என்பவரே இம்முறைப்பாட்டைச் செய்துள்ளார். குறிப்பிட்ட அம்முறைப்பாட்டில் பெண் வேட்பாளரான கே. ஏ. ரேணுகா தமயந்தி என்பவர் தனது தேர்தல் பிரச்சாரங்களுக்காக முன்னாள் ஜனாதிபதி திரு. மஹிந்த ராஜபக்ஷவினுடைய உருவப்படங்களைப் பிரயோகிப்பதாகவும், அவருடைய வாகனத்திலும் வீட்டிலும் முன்னாள் ஜனாதிபதியின் உருவப்படத்தினை காட்சிப்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்முறைப்பாட்டினை விசாரணை செய்யும் பொருட்டு குறிப்பிட்ட வேட்பாளருடைய வீட்டிற்கு பொலிஸார் சென்றிருந்த வேளையில், இலங்கை பொதுஜன முன்னனியின் ஆதரவாளர்களுக்கும் கே. ஏ. ரேணுகா தமயந்திக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக உருவெடுத்துள்ளது.

இம்மோதலின் உச்ச விளைவாக முறைப்பாட்டினை மேற்கொண்ட திரு. ஆர்.எம். லலித் ரத்நாயக்க என்பவர் சுயேட்சை வேட்பாளரான ரேணுகா தமயந்தியினை தாக்கியுள்ளார். இத்தாக்குதலின் விளைவாக வேட்பாளருடைய முகத்திலிருந்து இரத்தம் வெளியேறியுள்ளதுடன் அவர் உடனடியாக வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலால் கோபமடைந்த சுயேட்சை வேட்பாளரான ரேணுகா தமயந்தியின் கணவரான வி.ஜீ. அருண சமிந்த குமார தன்னுடைய மனைவியைத் தாக்கிய லலித் ரத்நாயக்கவின் மனைவியான புஷ்பா ஷிரோமளா என்பவரைத் தாக்கியுள்ளார். தாக்குதலுக்கு உள்ளான புஷ்பா ஷிரோமளா என்பவரும் வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார். இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களான அருண சமிந்த குமார மற்றும் லலித் ரத்னாயக்க ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு 11060 என்ற B இலக்கத்தின் கீழ் நீதவான் நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்டனர். பின்னர் இவர்களை 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்திலே அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் அச்சம்பவம் குறித்த காணொளியொன்றினை இணையத்தில் பதிவு செய்துள்ளார். இச்சம்பவம் இரு தரப்பினருக்கிடையிலான மோதல் என்ற போதிலும் ஒரு தரப்பினரின்

கருத்துக்கள் மாத்திரமே அக்காணொளியினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய செயற்பாடானது தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட, தேர்தல் காலப்பகுதியின் போது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தொடர்பில் பின்பற்ற வேண்டிய ஊடக விதிகளை மீறுவதாக அமைகின்றது. மேலும் அரசியலில் பெண்களின் பங்குபற்றுகையினையும், பிரதிநிதித்துவத்தினையும் உறுதிப்படுத்த முனைந்துள்ள இக்காலப்பகுதியிலே பெண் வேட்பாளர்களையும், பெண் ஆதரவாளர்களையும் ஏசுதல், அச்சுறுத்தல் மற்றும் தாக்குதல் போன்ற செயற்பாடுகள் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகும்.

**2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி, மட்டக்களப்பு மாவட்டம், மண்முனைப்பத்து பிரதேச சபை, ஆரியம்பதி தெற்கு வட்டாரம், வட்டார இலக்கம் 04:**

ஐக்கிய தேசிய கட்சியின் கீழ் போட்டியிடுகின்ற கே. ஜெயசந்திரிகா என்ற பெண் வேட்பாளரின் வீட்டிளை இனம் தெரியாத நபர்கள் சிலர் கற்களால் தாக்கியுள்ளனர். இச்சம்பவம் இரவு வேளையில் இடம்பெற்றுள்ளது என்பதுடன் இச்சம்பவத்தினால் குறிப்பிட்ட வேட்பாளருடைய வீடு சேதமடைந்துள்ளது. இச்சம்பவம் இடம்பெற்று சில நாட்களின் பின்னர் இத்தாக்குதல் தொடர்பில் வேட்பாளரினால் பொலிஸிற்கு முறைப்பாடு செய்யப்பட்டது. இம் முறைப்பாடு CIB III 98/148 என்ற இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதுவரையில் சந்தேக நபர் எவரும் அடையாளப்படுத்தப்படவில்லை.

**2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி, முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை: புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வாழும் பெண் ஒருவரான மஞ்சுளா பத்மநாதன் என்பவரை பலாத்காரமான முறையில் வீடொன்றில் தடுத்து வைத்திருந்தமையினால் அவர் மனநிலை மற்றும் உடல்நிலை பாதிப்புக்குள்ளாகியுள்ளார்.**

2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி அன்று வட மாகாண சபையின் விவசாய அமைச்சர் கே. சிவனேஷன் அவர்கள் மஞ்சுளா பத்மநாதன் என்பவருக்கு அழைப்பொன்றினை ஏற்பத்தி வருகின்ற உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களிலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக போட்டியிடுமாறு கோரியுள்ளார். அவ்வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட மஞ்சுளா பத்மநாதன் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி பகல் வேளையிலே விவசாய அமைச்சர் கூறியதன்படி வேட்பு மனுவில் ஒப்பம் இடுவதற்காக கோம்பாவில் பிரதேசத்திலுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமோகன் வீட்டிற்குச் சென்றுள்ளார். எவ்வாறெனினும் அவரது வீட்டினை அடையுமுன் அருகில் நின்ற சில குழுவினரால் நிறுத்தி வைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

மஞ்சுளா பத்மநாதன் விவசாய அமைச்சரிற்கு தொலைபேசி அழைப்பொன்றினை மேற்கொண்டு இவ்விடயத்தை தெரிவித்த போது, தான் அவ்விடம் நோக்கி வருவதாக கூறியுள்ளார். எனினும் குறிப்பிட்ட பெண் ஒப்பம் இடாது தனது வீடு திரும்பியுள்ளார். இவ்வாறு வீட்டிற்கு செல்கின்ற வழியில் அவரை இடைநிறுத்திய ஒருவர் அவரை வள்ளுவர் பிரசேத்திலுள்ள வீடொன்றில் சுமார் 4 மணி நேரம் பலவந்தமாகத் தடுத்து வைத்துள்ளார். அவ்வீடாது மஞ்சுளா பதமநாதனின் வீட்டிற்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றாகும் என்பதுடன் அவ்வீடு மஞ்சுளா பத்மநாதனின் அயலவரான ஜெகதீபனிற்கு சொந்தமானதாகும். தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது குறிப்பிட்ட நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது அவர் சம்பவத்தை முழுமையாக மறுத்துள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது எனவும் கூறியுள்ளார். மேலும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ் சிவமோகன் அவர்களை வினவிய போது இச்சம்பவத்திற்கும் தமக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

மஞ்சுளா பத்மநாதன் இவ்விடயம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றினை மேற்கொண்டுள்ளார். இது தொடர்பாக நாங்கள் குறிப்பிட்ட பொலிஸ் நிலையத்திடம் விசாரணைகளை மேற்கொண்ட போது மஞ்சுளா பத்மநாதனின் குறித்த

முறைப்பாடு CIB இன் கீழ் பதியப்பட்டுள்ளது எனவும் தேர்தல் வன்முறை அல்ல என்றும் தெரிவித்துள்ளனர்.

**2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி, கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு மாநகர சபை: வேட்பாளரொருவரை ஏசி அச்சுறுத்தல்:**

ஐக்கிய தேசிய சுதந்திர கூட்டமைப்பினைச் சேர்ந்த பெண் வேட்பாளரான முத்துக்குடாராச்சிகே நாமலி சுசந்தி அவர்கள் வாய்மொழி ரீதியான தாக்குதலுக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியுள்ளதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இச்சம்பவமானது இன்று நண்பகல் 12.00 மணியளவில் நீர்கொழும்பிலுள்ள கடுவப்பிட்டிய சந்திக்கு அருகிலுள்ள பல்பொருள் அங்காடிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவமானது குறிப்பிட்ட பெண் வேட்பாளர், தனது கணவர் (ஐக்கிய தேசிய சுதந்திர கூட்டமைப்பின் கீழ் நீர்கொழும்பு மாநகர சபைக்காகப் போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவர் ஆவார்) மற்றும் ஆதரவாளர்களுடன் தேர்தல் பிரச்சாரங்களுக்காக சென்றிருந்த போதே இடம்பெற்றுள்ளது. ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர் ஒருவரே இவ் அச்சுறுத்தலினை மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக நாங்கள் குறிப்பிட்ட பொலிஸ் நிலையத்திடம் விசாரணைகளை மேற்கொண்ட போது இரு தரப்பினரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து குறிப்பிட்ட பிரச்சினையினை சுமூகமாக தீர்த்து வைத்துள்ளதாக குறிப்பிட்டனர்.

**2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி, மட்டக்களப்பு மாவட்டம், மண்முனைப்பத்து பிரதேச சபை, ஆரியம்பதி தெற்கு வட்டாரம், வட்டார இலக்கம் 04: பெண் வேட்பாளர்களை இழிவுபடுத்துகின்றதான சமூக ஊடக பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல்**

ஐக்கிய தேசிய கட்சியின் கீழ் போட்டியிடுகின்ற கே. ஜெயசந்திரிகா என்ற பெண் வேட்பாளருக்கு எதிராக திட்டமிடப்பட்ட சமூக ஊடக பிரச்சாரங்கள் மேற்கொள்வதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வேட்பாளரின் மீது பலவிதமான குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்ற பொய்யான பிரச்சாரங்கள் முகநூலின் மூலமாக செய்யப்பட்டுள்ளன. இக்குற்றச்சாட்டுக்கள் பிரதானமாக குறிப்பிட்ட வேட்பாளர் பின்பற்றுகின்ற மதத்தினை அடிப்படையாகக் கொண்டமைகின்றன. அவளுடைய மதத்தினை மையப்படுதி மற்றும் அவளுடைய கணவரைப் பற்றி பொய்யான வதந்திகளை அடிக்கடி சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளதன் காரணமாக குறிப்பிட்ட வேட்பாளர் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளார். எனினும் இச்சம்பவம் குறித்து குறிப்பிட்ட வேட்பாளர் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்திருக்கவில்லை. ஏவ்வாறெனினும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது இவ்விடயம் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும், பொலிஸாரிற்கும் அறியப்படுத்தியுள்ளது.

**2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ஆம் திகதி, மட்டக்களப்பு மாவட்டம், மண்முனைப்பத்து பிரதேச சபை, செல்வ நகர், வட்டார இலக்கம் 05: பெண் வேட்பாளரின் வீட்டுக்குள் நுழைந்து சேதம் விளைவித்தல்**

கட்சியின் கீழ் உள்ளூர் அதிகார சபையின் கீழ் போட்டியிடுகின்ற சோமசுந்தரம் சந்திரிகா என்ற பெண் வேட்பாளரின் வீட்டிற்கு அனுமதியற்று நுழைந்த இனம் தெரியாத கும்பலொன்று வீட்டின் சமையலறையில் காணப்பட்ட அனைத்து பொருட்களையும் அடித்து உடைத்து சேதம் விளைவித்துள்ளனர். இவர் இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்துள்ளார். இம்முறைப்பாடானது EIB 74/43 என்ற முறைப்பாட்டு இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி, கங்கவட்ட கோரளை, கண்டி மாவட்டம்: எவ்வித அறிவிப்புக்களுமின்றி கர்ப்பிணித் தாயின் பெயரை, பெயர் நியமனப் பட்டியலில் சேர்த்துள்ளதுடன், போலி கையெழுத்தும் இடப்பட்டுள்ளது**

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு அறிக்கையிடப்பட்டதன்படி, தென்னைப் பயிர்ச்செய்கை சபையிலே பணிபுரிகின்ற கர்ப்பிணித் தாயான என்.எம்.உதயங்கனி குமுதுகுமாரி என்பவரின் பெயர் அவருக்குத் தெரிவிக்கப்படாமலேயே கங்கவட்டகோரளை பிரதேச சபைக்கான பெயர் நியமனப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவருடைய கையெழுத்தும் போலியான முறையில் இடப்பட்டுள்ளது. வேட்பாளர்களுக்கான அறிவித்தல்களை வழங்குவதற்காக பொலிஸார் குறிப்பிட்ட கர்ப்பிணித் தாயினை அழைத்திருந்த போதே இவ்விடயம் வெளிவந்துள்ளது. பொலிஸாரின் அழைப்பினைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்திற்கு சென்ற கணவன் தன்னுடைய மனைவியின் பெயர், பெயர் நியமனப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதனை அறிந்து அதிர்ச்சியடைந்துள்ளார். தன்னுடைய மனைவி கர்ப்பமாக உள்ளதாகவும், அவருக்கு தன்னுடைய பெயர், பெயர் நியமனப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளமை பற்றி தெரியாது எனவும் உறுதிப்படுத்தியுள்ளார். எவ்வாறெனினும் மக்கள் தேசிய கட்சியின் தலைவர் இவ்விடயம் தொடர்பில் குறிப்பிட்ட தரப்பிடம் மன்னிப்பு கேட்டுள்ளார். எவ்வாறெனினும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் இது பற்றி குறிப்பிட்ட கட்சித் தலைவரிடம் தொடர்பு கொண்டு விசாரித்த போது இது பற்றி தான் பொலிஸாரிற்கு அறிவித்துள்ளதாக கூறி எங்களுக்கு கருத்து தெரிவிக்க மறுத்துள்ளார்.

இவ்வன்முறைச் சம்பவம் தொடர்பான சரியான விசாரணைகளை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நடைபெறப்போகும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் நடவடிக்கைகளை சரியான முறையில் நடத்திச்செல்வதற்கு அத்தியாவசியமாகும் என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் கருதுகின்றது. மேலும் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்ற பெண் வேட்பாளர்களை சங்கடத்திற்குட்படுத்துகின்ற வகையிலான செயற்பாடுகளை தடுப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு முயற்சிக்கின்ற வேளையிலே இம்முயற்சிக்கு பெண் செயற்பாட்டாளர்களும், சிவில் சமூக அமைப்புக்களும் பங்களிப்புச் செய்ய வேண்டியது அத்தியாவசியமாகும்.

**தேர்தல் காலத்தின் போது தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் விசேட கவனத்துடன் அவதானித்த விடயங்கள்**

**வதிவிட பகுதிகளிலே தேர்தல் ஊர்வலங்களினால் ஏற்படும் இடையூறுகளை குறைப்பதற்கான வழிகாட்டுதல்களை அளித்தல்**

பெயர்நியமனங்களுக்கான அழைப்பு விடுக்கப்பட்ட தினத்திலிருந்து இடம்பெறுகின்ற அனைத்து தேர்தல் பேரணிகள் தொடர்பிலும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் தொடர்ச்சியாக கண்காணித்து வருகின்றது. அவற்றுள் மிகப் பிரதான கண்காணிப்பாக அமைவது அத்தகைய பல தேர்தல் பேரணிகள் அதிகமான பொதுமக்கள் வசிக்கின்ற வதிவிட பகுதியிலுள்ள பாதைகளின் நடுவில் இடம்பெறுகின்றன. கடந்த வாரத்தில் இவ்வாறு அதிகமாக மக்கள் கூட்டம் கூடுகின்ற பிரதான பிரதேசங்களிலே பிரதான அரசியல் கட்சிகளும் இத்தகைய தேர்தல் பேரணிகளை வழிநடத்தியிருந்தமையினை காணக்கூடியதாக இருந்தது. தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் ஆனது ஏலவே தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்தது. அத்துடன் தேர்தல் பேரணிகளுக்கான அனுமதியினை வழங்குவதற்கு பொறுப்பான அதிகாரிகள் கவனிக்க வேண்டிய விதிமுறைகளை வெளியிடுமாறும் வேண்டுகோள் விடுத்திருந்தது. இவ்வாறு செய்யவதன் மூலமாக குறிப்பிட்ட அதிகாரிகள் தேர்தல் பேரணிகளுகான அனுமதியினை வழங்கும் போது தன்னிச்சையாக வழங்காமல் குறிப்பிட்ட சில விடயங்களைக் கவனத்திற் கொண்டே அனுமதி வழங்க வேண்டிய நிலைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

**தேர்தல்களில் சமூக ஊடக பாவனையின் தாக்கம்**

சமூக ஊடகங்களானவை மிகவும் நவீனமானதும் அதிக செலவற்றதுமான தேர்தல் பிரச்சார ஊடகமொன்றாக இனங்காணப்படுகின்றது. இச் சமூக ஊடகங்கள் பல்வேறுபட்ட அரசியற் கட்சிகளின் செய்திகளை மற்றும் தகவல்களை ஒரு கரந்தளவிலான நபர்கள் கூட்டத்திற்கு கொண்டு செல்கின்றது. எவ்வாறெனினும், சுதந்திரமானதும் மற்றும் நியாயமானதுமான தேர்தல்களில் தாக்கத்தினை எதிர்மறையாகப் பாதிக்கக்கூடியதான வெறுக்கத்தக்கப் பேச்சுக்கள் சமூக ஊடகங்களில் பதிவிடப்படுவதையும் பகிரப்படுவதையும் தடுப்பதற்கு ஏதேனும் பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மேலும், சில நாட்களுளுக்கு முன்பு தபால் மூல வாக்களிப்புக்களை மேற்கொண்டிருந்த அரசாங்க ஊழியர்கள் சிலரும் வாக்குப்பத்திரங்களுடனான புகைப்படங்களை முகநூல் உள்ளடங்கலான சமூக ஊடகங்களில் பதிவு செய்திருந்தார்கள். இவையும் தேர்தல்கள் தொடர்பான சமூக ஊடகங்களின் எதிர்மறையான அம்சம் ஒன்றாகவே கருதப்படுகின்றது. ஆகவே தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது மேற்குறிப்பிட்டவாறான செயல்களில் ஈடுபட்டோருக்கு எதிராக சட்ட நவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், அவர்களை தேர்தல் கடமைகளிலிருந்து விலக்க வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

**நன்கொடை மற்றும் பொருள் விநியோகம் மூலமாக நுட்பமான மற்றும் தந்திரமான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுதல்**

நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்கின்ற செல்வாக்கு மிக்க அரசியற் புள்ளிகள் தொடர்சியாக பொருட்களை விநியோகித்தல் மற்றும் நன்கொடைகளை வழங்குதல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

**மாத்தளை மாவட்டத்தில் பிரதி அமைச்சர் ஒருவரின் செயற்பாடு**

குறிப்பிட்ட பிரதி அமைச்சர் மாத்தளை மாவட்டத்தின் வதிவாளர்களை சுமார் 15 தலயாத்திரைகளுக்கு அழைத்துச் சென்று அவருடைய குறிப்பிட்ட கட்சிக்கு வாக்களிக்குமாறு வலியுறுத்தியதனூடாக சட்டமுரணான தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளார். இதனை இவர் மிகவும் நுட்பமான முறையில் செய்துள்ளார். மேலும், குறிப்பிட்ட அமைச்சர் குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள வதிவாளர்களை தன்னுடைய கட்சிக்கு வாக்களிப்பதற்கு பதிலீடாக தென்னங்கன்றுகளை கொண்டு செல்லுமாறு கூறியுள்ளார். குறிப்பிட்ட அரசியல் கட்சியினை விளம்பரப்படுத்துவதற்காக அவர்இநுட்பமான முறைகளினை கையாள்வதனால் மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பில் குறிப்பிட்ட அரசியல்வாதியினை குற்றஞ்சாட்டுவதில் தேர்தல்கள் ஆணைக்குழு சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றது.

மாத்தளை மாவட்டத்தின் உதவி தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்ட தலயாத்திரைகள் தேர்தல் விளம்பரமாக அமையும் பட்சத்தில் அத்தலயாத்திரையில் பங்குபற்றியவர்கள் சட்டமுரணான தேர்தல் பிரச்சாரத்திற்கு உதவி புரிந்த குற்றத்திற்கு ஆளுாக்கப்படுவாரகள் என்ற தகவலை அறிவித்து துண்டு பிரசுரங்களை விநியோகித்துள்ளார். தேர்தல் விதிகளை நுட்பமாக மீறுகின்ற இச்சம்பவத்திற்கு மேலாக, அரசாங்கத்திலுள்ள இரண்டு அமைச்சர்கள் கேகாலை மாவட்டத்தில் தொழில்களுக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீடுகளை வழங்குவதாகவும் தேர்தல்கள் வன்றைகளை கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு தகவல்கள் கிடைக்கப்பட்டுள்ளன. மேலும் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அம்மாவட்டத்திற்குள் தன்னுடைய புகைப்படங்களை பதித்துள்ள விளம்பர பொருட்களை வைத்து தொடர்ச்சியாக பிரச்சாரம் செய்து வருகின்றார். இது நடைபெற இருக்கின்ற தேர்தல்களின் கௌரவத்தினை அழிப்பதாக அமைகின்றது. இதேவேளை இத்தேர்தல்களிலே போட்டியிடுகின்ற தன்னுடைய மனைவியை வெற்றி பெறச் செய்யும் நோக்குடன் பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த ஊவா மாகாண சபை உறுப்பினர் ஒருவர் தேர்தல் சட்டங்களினை பல முறைகளில் மீறி வருவதாக தகவல்கள் கிடைக்கப்பட்டுள்ளன.